கைவினை கலைஞர்களுக்கு ஊக்கமிகை ஊதியம் கொடுக்கும் திட்டத்திற்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது. திட்டத்தைப் பற்றிய விபரங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

* 236 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Handicrafts Development Corporation proposes to advance loans up to Rs. 5,000 to small artisans under tie-up arrangements with commercial banks; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) கைவினைக் கலைஞர்களுக்கு கடனுதவி வழங்குவதற்கான செயற் குறிப்பு ஒன்றும் கைவினைப்பொருள் அபிவிருத்திக் கழகத்திடம் இல்லை. எனினும் அக்கழகம் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளிடத்தில் இதுபற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தின. நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் கைவினைக் கலைஞர்களுக்கு கடனுதவி வழங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. அகில இந்திய கைவினைப் பொருள் கழகம், தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் தற்பொழுது இத்திட்டத்தைச் செயல்முறைப் படுத்த ஒத்துக்கொண்டுள்ளது. தரமுறு வட்டி விகிதத் திட்டத்தின் அடிப்படையில் இந்தக் குறைந்த வட்டிக் கடனுதவி வழங்கப்படும். இந்தக் கடனுதவி அந்தந்த மாவட்டத்திலுள்ள நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளின் கிளைகள் மூலமாக வழங்கப் படும். அதிகப்படியான கடனுதவி ரூ. 5,000 (ரூபாய் ஐயாயிரம்) ஆகும். வட்டி விகிதம் 4 (நான்கு) விழுக்காடு ஆகும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, குடிசைத் தொழில்கள் கைவினைப் பொருள்கள் என்ற இனத்தின் கீழ் வருவதாகக் கருதப்படுகிறதா? தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் இத் தொழில்களை ஆர்வத்தோடு செய்ய முன் வருகிறார்கள். குறிப்பாக, என்னுடைய தொகுதியில், மதுராந்தகத்திலும் அச்சரப்பாக்கத்திலும் தாழ்த்தப்பட்ட மக்கள் இத்தொழில்களைச் செய்கிறார்கள். அவர்களுக்கு— அவர்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு தனிச் சலுகை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1975 நவம்பர் 7]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் ஏற்கனவே பதிலில் கூறியபடி டிபரான்சியல் ரேட் ஆப் இன்டரஸ்டில் கடன் வழங்குகிறார்கள். 4 சதவிகிதம்தான் வட்டி. இதைப் பெறு வதற்கு எந்த கைவினைஞர்களும் முன்வரலாம். சில விதிகள் இருக்கின்றன. இவ்வளவு வருமானம் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. எனவே, தாழ்த்தப்பட்ட மக்கள் இக்கடனைப் பெற்று இத்தொழில்களைச் செய்வதற்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது. கைவினைக் கலைஞர்களுக்கு வசதிகளைச் செய்து தர தொழில் துறை இலாக்காவினரும் முன்வருகிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இத்தகைய தொழில்களைச் செய்பவர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்புத் தர வேண்டி இருக்கிறது. குறிப்பாக, மதுரை போன்ற இடங்களில் கூடை, முறம் முடைதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டிருக் கிறார்கள். அத்தொழில்களை எல்லாம் கூட இந்த கைவினைத் தொழில்கள் என்பதன் கிழ் கொண்டு வந்து அவர்களுக்கு உதவி செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அவர்களுக்கும் கடன் உதவி செய்ய திட்டம் இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் இத்திட்டத்தை அமுலாக்கலாம். ரூ. 5,000 வரை கடன் கொடுக் கிறார்கள். விண்ணப்பங்கள் தகுதியின் அடிப்படையில் பிரிக்கப் பட்டு கடன் வழங்குகிறார்கள். இதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன என்று தொழில் துறை அதிகாரிகள் சொல்லி இருக்கிறார்கள். இவர் கள் வங்கிகளுடன் தொடர்பு கொண்டு கடன் உதவி செய்ய ஏற் பாடுகள் நடைபெற்று வருகின்றன.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : தலைவரவர்களே, கைவினைத் தொழிலில் கைத்தறியும் சேர்க்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கைவினை வேறு—கைத்தறி வேறு.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவில் இத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாக அறிகிறேன். கன்னியாகுமரி ஜில்லாவில் எம்பிராய்டரி ஒரு முக்கியமான

கைவினைத் தொழில். பல பெண்களும் விதவைகளும் இத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். வங்கிகள் இவர்களுக்குக் கடன் தருவதென்றால் செக்யூரிடி கேட்கிறார்கள். அவர்கள் செக்யூரிடி தர முடியாத நிலையில் இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு செக்யூரிடி இல்லாமல் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் செக்யூரிடி கேட்கக் கூடாது என்பதுதான் கொள்கை. எனினும் சில இடங்களில் செக்யூரிடி கேட்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது.

Eligibility.—The family income from all sources for an intending borrower should not exceed Rs. 2,000 per annum in rural areas and Rs. 3,000 per annum in urban areas.

He should not own any land or the size of his holdings should not exceed one acre in the case of irrigated land and 2.5 acres in of non-irrigated land.

இது செக்யூரிடி ஓரியண்டட் அல்ல—ஜாப் ஓரியண்டட் என்பதுதான் கொள்கை. ஆனால் நாட்டுடமை ஆக்கப்பட்ட வங்கிகளின் பிராஞ்ச் மேனேஜர்கள் மேலே இருக்கிற அமைப்புகளுக்குப் பயப்படுகிறார்கள்.

எனவே, நான் என்ன சொல்கிறேன் என்றால் வங்கி அதிகாரிகளும் நமது இலாக்கா அதிகாரிகளும் இதில் இணைந்து செயல்பட வேண்டும். இதற்காக சென்னையிலுள்ள நேஷனலைஸ்ட் வங்கி அதிகாரிகளுடன் நமது இலாக்கா அதிகாரிகள் கலந்து பேசினார்கள். பிராஞ்சு மானேஜர்களுடன் ஒரு தொடர்பு—கோவார்டினேஷன் ஏற்படுத்திக் கொண்டு விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து, சில இடங்களுக்குச் சென்று பார்த்து, கடன் கொடுக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். வட்டி மிகவும் குறைவு தான்—4 சதவிகிதம் தான். அதைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை இங்கே சொன்னால் மட்டும் போதாது. அந்தந்த ஊர்களுக்குச் செல்லும்போது விண்ணப்பங்களை வாங்கி சம்பந்தப்பட்ட வங்கி அதிகாரியுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்குக் கடனைப் பெற்றுத் தர வேண்டும்.

1975 நவம்பர் 7]

திரு. த. சோனையா : தலைவரவர்களே, கைவினைத் தொழில்—கடன் பெறுவதற்கு உரிய தொழில்கள் என்னென்ன என்று அறிவிக்க முடியுமா? கையால் மண் எடுத்து கைவினைப் பொருட்களைச் செய்கின்ற குயவர்கள் இத்திட்டத்தின்கீழ் கடன் வசதி பெறுவதற்கு அருகதை உடையவர்களா? ஆம் என்றால் அவர்களையும் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா? வங்கிகள் மூலம் கடன் பெற அங்கத்தினர்கள் அதிகாரிகளை அணுக வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. த. சோனையா: அமைச்சர் அவர்கள் அதை விளக்கு வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : குயவர்கள் இத் திட்டத்தின்கீழ் கடன் பெற வாய்ப்பு உண்டு. நமது சட்டமன்ற உறுப்பினர்கள் நம் அதிகாரிகளை அணுகி இதைப் பற்றி எடுத்துச் சொல்லி, சிக்கல் இருக்குமானால், மாநில அளவில் உள்ள அதிகாரிகளை அணுகி கடன்களைப் பெற்றுத்தர முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். சிக்கல்கள் இருக்கலாம். எதிலும் சிக்கல்கள் இருக்கத்தான் செய்யும். அச்சிக்கல்களைத் தீர்ப்பது தான் நம்முடைய பொறுப்பும் கடமையும் ஆகும்.

திரு. எஸ். வடிவேல்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொன்னதுபோல, அதுவும் குறிப்பாக விவசாயத் தொழிலாளர்கள் நாட்டுடமை ஆக்கப்பட்ட வங்கி களில் இருந்து நிதி உதவி பெற முடிகிறது. நாட்டுடமை ஆக்கப் பட்ட வங்கிகள் ஜாமீன் இல்லாது கடன் தொகை வழங்கத் தயாராக இல்லை. ஆகையால் பாய் முடைதல், கூடை பின்னுதல் போன்ற கைவினைத் தொழிலாளர்கள் நாட்டுடமை ஆக்கப்பட்ட வங்கிகளில் இருந்து கடன் உதவி பெற முடிவதில்லை. அதனால் அவர்கள் நிதிப் பற்றாக்குறையினால் கஷ்டப்படுகிறார்கள். அவர் களுக்கு இந்த வங்கிகள் கடன் உதவி செய்தால் அவர்கள் தங்கள் வறுமையைப் போக்கிக் கொள்ள முடியும், பஞ்சத்தைப் போக்கிக்

கொள்ள முடியும். இப்படிப்பட்டவர்களுக்கு கடன் கிடைப்பதற்கு நம்முடைய அரசு ஏதாவது செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே மத்திய சர்க்கார் போட்டுள்ள உத்திரவுப்படி ஜாமின் வாங்கிக் கொண்டு தான் தொகை கொடுக்க வேண்டுமென்று கிடையாது. ஜாமீன் கேட்காமலே தொகை கொடுக்க வேண்டுமென்ற கொள்கையைத் தான் வகுத்திருக்கிறார்கள்.

அது மாத்திரமல்ல. இப்படிப்பட்ட கைவினைக் கலைஞர்களை ஊக்கப்படுத்தவும், கிராமப்புறத்தில் உள்ள தொழிலாளர்களை ஊக்கப்படுத்தவும் இவர்களுக்கும் கடன் உதவி செய்யலாம் என்று உத்திரவு போட்டிருக்கிறார்கள். எனவே, இருக்கின்ற நிலைமைகளைப் பரிசீலனை செய்து இவர்களுக்கும் கடன் கிடைப்பதற்கு வழி செய்யப்படும். இதில் உள்ள சட்டச் சிக்கல்களை நீக்குவதற்கு நம்முடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, இன்றைக்கு இந்தக் கைவினைக் கலைஞர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை அரசே வாங்கி அதை விற்பதற்கு ஏற்பாடு செய்யுமா? தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய மக்களை ஒன்று சேர்த்து அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை அரசு மூலம் விற்பதற்கு அரசு வகை செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இந்தக் கைவினைத் தொழிலாளர்கள் உற்பத்திப் பொருட்களை செய்வதற்கு "ஹேண்டிகிராப்ட்ஸ் டெவலப்மெண்ட் கார்ப்பொரேஷன்" உதவி செய்து கொண்டிருக்கிறது. இப்படி உதவி செய்வதுடன் அவர்களுக்குக் கடன் கிடைப்பதற்கு 5 தேச உடமை ஆக்கப்பட்ட வங்கிகள் மூலம் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை "ஹேண்டிகிராப்ட்ஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷனே" வாங்கிக் கொள்கின்றது. அதனால் அவர்களுக்கு கஷ்டங்கள் இல்லை என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

1975 நவம்பர் 7]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் கூறியது போல நாங்கள் பலமுறை முயற்சித்தோம். பாங்கு அதிகாரிகள் என்ன கூறுகிறார்கள் என்றால் மத்திய அரசாங்கத்திலிருந்து கடன் கொடுக்கலாம் என்று மட்டும்தான் உத்திரவு போட்டிருக்கிறார்களே தவிர, செக்யூரிடி வாங்காமல் கடன் கொடுத்தால் அந்த "ரெஸ்பான்சிபிலிடி" கொடுக்கின்ற அதிகாரிகளைத்தான் சேருகிறது; நாங்கள் அந்த "ரெஸ்பான்சிபிலிடி"-யை ஏற்பதற்குத் தயாராக இல்லை என்கிறார்கள். எனவே, இந்தச் சட்டத்தைத் திருத்த மத்திய அரசாங்கத்தைக் கேட்பதற்கு ஆவன செய்ய இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இது ஒரு பெரிய பிரச்னை. நாட்டுடைமை ஆக்கப்பட்ட வங்கிகள் சில கைவினைஞர்களுக்கு நிதி உதவி அளித்து வருகிறார்கள். நம்முடைய ஸ்டேட் இண்டஸ்டிரீஸ் டெவலப்மெண்ட் கார்ப்பொரேஷன் அதிகாரிகள் இந்த வங்கி அதிகாரிகளோடு கலந்து பேசி இந்தக் கைவினைக் கலைஞர்களுக்கு நிதி உதவி செய்ய வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். இதில் ஏதாவது சிக்கல் இருக்குமானால் மத்திய அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தி அவற்றை நீக்குவதற்கு நம்முடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஸ்டேட் இண்டஸ்டிரீஸ் டெவலப்மெண்ட் கார்ப்பொரேஷன் அதிகாரிகள் இப்படிப்பட்டவர்கள் கடன் உதவி பெறுவதற்கு உதவி செய்கிறார்கள் என்று சொன்னார்கள். ஒரு வட்டாரத்திற்கு, 2 வட்டாரங்களுக்குச் சேர்த்து "இ.ஓ.(ஐ)" எனும் தொழில் விஸ்தரிப்பு அதிகாரி இருக்கிறார். ஒவ்வொரு "இ.ஓ.(ஐ)"-ம் குறைந்தது 10, 15 மனுக்களையாவது ஒவ்வொரு மாதமும் ஊக்குவித்து வேண்டியதைச் செய்யத்தக்க வகையில் அவர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்திரவுகளை அரசாங்கம் வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் தொழிலாளர்களுக்கு கடன் கிடைப்பதற்கு மாதாமாதம் கண்காணிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாதாமாதம் கண்காணிப்பது என்பது பெரிய வேலையாகப் போய்விடும். இதற்கென்று தனிப்பட்ட அதிகாரிகளை நியமிப்பது என்பது கஷ்டமாக இருக்கிறது. நம்முடைய அதிகாரிகளுக்கு ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறோம். இண்டஸ்டிரீஸ் இலாகா, ரெவின்யூ இலாகா, பஞ்சாயத்து இலாகா ஆகிய மூன்றும் சேர்ந்து அந்த அதிகாரி இடத்தில் ஒரு ஏற்பாடு செய்து கொண்டு, அந்த அதிகாரிகள் குறிப்பிட்ட பகுதியைப் பார்வையிட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல, அந்த அந்தப் பகுதிகளில் இருக்கிற அதிகாரிகள் கண்காணிக்கலாம். கண்காணித்து இப்படிப்பட்டவர்களுக்கு கடன் கிடைக்க வகை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Yarns for fishing nets.

* 237 *Q*.—Thiru **N. K. PALANISAMY** : Will the **Hon. the** Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that depots have been opened in **Tamil Nadu by the Fisheries Department for the supply of yarn** to Fishermen for fishing nets; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ) இல்லை.

(இ) எழவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : இந்த நைலான் நூல் எங்கே இருந்து வாங்கப்படுகிறது? விலைக்கு வாங்கி சப்ளை செய்யப்படுகிறதா? இன்னும் அதிகப்படியாக வாவலைப்பதற்கு சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : பேரவைத் தலைவரவர்களே, இந்த நூல் தயார் செய்யப்படுகிற இடம் பம்பாயை அடுத்துள்ள பகுதி. அங்கே உள்ள 'மெசர்ஸ் கார்லான் நைலான்'